**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 47/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 20.08.2025.**

| | |
|---|---|
| **Name : ரமேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தோரமங்கலத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். கடந்த 16.01.2022ம் தேதி மாலை நேரத்தில் சிந்தாமணி என்பவரிடம் யாரோ சண்டையிட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 16.01.2022 ம் தேதி மாலை 6.30 மணிக்கு நான் எனது நண்பர்கள் பெருமாள், ரமேஷ் ஆகியோருடன் முனியப்பன் கோவில் அருகே நின்று கொண்டிருந்த போது அ.சா.1 இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் பேசிய பின்னர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சமயத்தில் பந்து அ.சா.1 ன் மீது பட்டது என்றால் எனக்கு தெரியாது.

3) இது பற்றி அ.சா.1 கேட்ட போது எதிரிகள் கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் எனக்கு தெரியாது.  எதிரி அருள் கையால் அ.சா.1ன் நெஞ்சின் மீது அடித்தார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி கோபி கிரிக்கெட் மட்டையால் அ.சா.1ன் வலது தலையில் அடித்தார் என்றால் எனக்கு தெரியாது. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு  தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 47/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 20.08.2025.**

| Name : ரவி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தோரமங்கலத்தில் குடியிருந்து கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். கடந்த 16.01.2022ம் தேதி மாலை நேரத்தில் சிந்தாமணி என்பவரிடம் யாரோ சண்டையிட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 17.01.2022 ம் தேதி மாலை 5 மணிக்கு நான் மற்றும் ராஜகோபால் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த

வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான நாச்சம்பட்டி முனியப்பன் கோவில் அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.